# இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மீது ஆட்சிமுறைமையின் தரத்தின் தாக்கம்:ARDL Bound சோதனை பகுப்பாய்வு

ந. கனப்பிரியா[1], சி. விஜயகுமார்[2]

*பொருளியல் துறை, கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை*

**அறிமுகம்**

வெளிநாட்டு நேரடி முதலீடு (FDI) என்பது இலங்கை போன்ற வளரும் நாடுகளின் பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கான மிக முக்கியமான நிதி வளங்கள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. நாட்டின் தனிநபர் வருமானம், வாழ்க்கை தரம், மொத்த உள்நாட்டு உற்பத்தியை உயர்த்துதல், வறுமையை குறைத்தல், மூலதன பற்றாக்குறை எதிர்கொள்ளல் போன்றவற்றிற்கு FDI உதவுகிறது. அந்த வகையில் வெளிநாட்டு முதலீடு என்பதனை நேரடி முதலீடு ( Direct Investment) மற்றும் பட்டியல் முதலீடு ( portfolio Investment) என இரு வகைப்படும். வெளிநாட்டு நேரடி முதலீடு என்பது ஒரு நாட்டில் பிறிதொரு நாட்டினது அரசாங்கமோ, நிறுவனமோ அல்லது நபரோ உற்பத்தி அல்லது வணிகத்துறையில், நேரடியாக அந்நியச் செலாவணியை முதலீடு செய்வதாகும். OECD இன் வரையறைப்படி " FDI என்பது ஒரு நாட்டில் வசிக்கும் ஒரு முதலீட்டாளர் அல்லது நிறுவனமானது இன்னொரு நாட்டில் வசிக்கும் ஒரு நிறுவன குடியிருப்பாளர் மீது நீடித்த நலனையும் குறிப்பிடத்தக்க அளவிலான செல்வாக்கையும் நிறுவுவதாகும்". இது ஓர் எல்லை கடந்த முதலீட்டின் வகையாகும். இது உள்நாட்டு சேமிப்பு மற்றும் முதலீட்டுக்குமிடையிலான இடைவெளியை குறைக்கின்றன. வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை தூண்டும் இயந்திரங்களே வெளிநாட்டு நேரடி முதலீடுகள் என புதிய பழம் பொருளியலாளர்கள் கருதினர் (Senal ,2018). அந்தவகையிலே, முதலீட்டினை உள்வாங்கும் நாடுகளின் (Host country) நிறுவனங்களுடன் முதலீட்டினை மேற்கொள்ளும் நாடுகளின் (Home country) நிறுவனங்கள் புதிய தொழிநுட்பம், மூலதனம், செயன்முறைகள், உற்பத்திகள், அமைப்பு ரீதியான நுட்பங்கள் மற்றும் முகாமைத்துவ அறிவு என்பவற்றினை பரிமாற்றிக் கொள்வதனூடாக பொருளாதார அபிவிருத்திக்கான உறுதியானதோர் ஊக்கத்தினை வழங்குகின்றன. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் தனியார் மற்றும் பொதுத்துறை மூலதன உருவாக்கத்திற்கான ஆற்றல் வாய்ந்த மூலங்களாகக் காணப்படுகின்றன என Saravanamuttu, 1999 இல் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், பொதுவாக வறிய நாடுகள் தமது முதலீட்டுத் தேவைகளினைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான உள் நாட்டு வளங்களைக் கொண்டிருப்பதில்லை. இதற்கு குறைந்தளவான உள்நாட்டு சேமிப்பு மிக முக்கிய காரணியாக இருப்பதுடன், குறைந்த தலாவருமானம், உயர்ந்த மற்றும் அடிக்கடி தளம்பலடையும் பணவீக்க வீதம், மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதத்தில் குறைந்தளவான ஏற்றுமதி, ஆட்சி முறைமையின் குறைவான தரம் மற்றும் சிறப்பற்ற நிதிசார் இடைத்தரகர்கள் என்பன காரணமாகின்றன (UNECA, 1995). எனினும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் ஒவ்வொன்றும் தமது பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான கருவியாக வெளிநாட்டு

நேரடி முதலீட்டினைப் பயன்படுத்தி வருகின்றன. ஆகவே FDI இனை ஈர்ப்பதற்கு வேண்டிய நிபந்தனைகள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். அவற்றுள் கவர்ச்சிகரமான முதலீட்டு சூழல், சீரான பொருளாதார கொள்கைகள், நல்லாட்சி, பொருளாதார ஸ்திரத்தன்மை, சொத்துரிமைக்கான உத்தரவாதம், சட்டத்தின் ஆட்சி மற்றும் ஊழல் இல்லாமை முதலியன முக்கியமான காரணிகளாக அமைகின்றன. எனினும் இக்காரணிகளில் ஆட்சி முறைமையின் தரமானது முதலீட்டுக்கான ஆபத்துடன் தொடர்புடைய மிக முக்கியமான நிபந்தனையாகக் காணப்படுகின்றது.

ஆட்சி என்பது தீர்மானம் எடுக்கும் செயன்முறை எனவும் எடுத்த தீர்மானங்களைச் செயற்படுத்தும் செயன்முறை எனவும் வரைவிலக்கணப்படுத்தலாம். ஆட்சி முறைமையின் தரம் உயர்வாக காணப்படுகின்ற நிலைமையில் அது நல்லாட்சி (Good Governance) என அழைக்கப்படுகின்றது. இவ் நல்லாட்சியின் முக்கிய பண்புகளாக பங்குபற்றல் (Participation), ஒருமித்த கருத்து நிலை (Consenus Oriented), பொறுப்புக் கூறும் தன்மை (Accountability), வெளிப்படைத்தன்மை (Transparency), பதிலளிக்கக் கூடியதன்மை (Responsiveness), வினைத்திறனும் விளைதிறனும் (Effectiveness and Efficiency), சமத்துவமும் உள்வாங்கலும் (Equity and Inclusiveness), சட்ட ஒழுங்கைப் பின்பற்றல் (Rule of Law) என்பன உள்ளன (UNESCO, 2009).

உலகளாவிய ரீதியில் 1980 களின் நடுப்பகுதியில் தொழில்நுட்ப முன்னேற்றம், சந்தைப்படுத்தல் வசதி போன்ற காரணங்களால் FDI சர்வதேச வர்த்தகத்தை விட வேகமாக அதிகரித்தது ( Shujirourata, 1998 ). 1991 – 2000 காலத்தில் உலகளாவிய ரீதியில் 24% ஆக அதிகரித்த போதிலும் வளர்ந்து வரும் நாடுகளில் 20% அதிகரித்துள்ளது (உலக முதலீட்டு அறிக்கை , 2002). பின்னர் 2001 இல் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மந்தநிலையால் FDI யை கடுமையாக விழ்ச்சி அடைந்தது மேலும் 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2018ல் தேறிய வெளிநாட்டு முதலீடு 27% ஆக குறைவடைந்துள்ளது (சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புக்கான அபிவிருத்தி நிறுவனம், 2019). மேலும் 2019ம் ஆண்டு ஏற்பட்ட Covid –19 சுகாதார நெருக்கடியின் காரணமாக, உலகளாவிய FDI 2020 ஆம் ஆண்டில் 35% சதவீதம் குறைந்து, வெறும் 1 டிரில்லியன் டாலர்களை மட்டுமே எட்டியது. இந்த அறிவிக்கப்பட்ட உலகளாவிய FDI அளவு 2005 ஆம் ஆண்டுக்குப் பிறகு மிகக் குறைந்த FDI அளவாக அடையாளம் காணப்பட்டது. இருந்தபோதிலும், 2020 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட FDI அளவு உலகளாவிய நிதி நெருக்கடியின் போது அறிவிக்கப்பட்ட FDI அளவை விடவும் கணிசமாக குறைவாக இருந்தது. Covid –19 தொற்றுநோய்க்கான தணிப்பு நடவடிக்கையாக செயல்படுத்தப்பட்ட ஊரடங்குகள் முதன்மையாக நிலவிய முதலீட்டு திட்டங்களை பலவீனப்படுத்தி மேலும் வெளிநாட்டு நிறுவனங்கள் தங்கள் புதிய திட்டங்களை மறுபரிசீலனை செய்ய வழிவகுத்ததன் மூலம் உலகின் குனுஜகள் கணிசமாக மோசமடைய காரணமாக அமைந்தது (ஐக்கிய நாடுகள் (UN), 2021).

இலங்கையில் காலனித்துவ ஆட்சி காலத்திலேயே வெளிநாட்டு நேரடி முதலீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வரலாற்று பதிவுகள் கூறுகின்றன. 1948ல் சுதந்திரம் அடைந்தபோது இலங்கையின் அபிவிருத்திக் குறிகாட்டிகள் தெற்காசியா மற்றும் கிழக்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் சாதகமாக இருந்த போதிலும் பொருளாதார வளர்ச்சி மற்றும் FDI ஐ உட்பட முதலீடுகள் குறைவாக இருந்தது. 1977ல் திறந்த பொருளாதாரக் கொள்கையை தொடர்ந்து, 1978ல் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு மற்றும் ஏற்றுமதி

ஊக்குவிப்பு வலயம் (Export Promoting Zone) என்பன ஸ்தாபிக்கப்பட்டதுடன் FDI உட்பாய்ச்சல் பெருமளவு அதிகரித்தது. 1980 களில் FDI குறைவாக காணப்பட்டது (US $43 million), 1999ல் (US $176 million) என்றும் 2007ல் (US $603 million) ஆக உயர்வடைந்தது. 2009 போரின் பின்னர் 2010ல் இருந்து பொருளாதார மீட்சியினால் படிப்படியாக FDI அதிகரித்து சென்றன. 2018ல் வரலாற்றில் அதிகபட்சமாக (US $1614,044,009billion) நாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. COVID–19 , ஈஸ்டர் ஞாயிறு கொண்டு தாக்குதல், பொருளாதார நெருக்கடி போன்ற நிகழ்வுகளை தொடர்ந்து தற்போது இலங்கையின் FDI 2022ல் US $884 million ஆக உள்ளது. இருப்பினும் இது 2020 உடன் ஒப்பிடுகையில் முன்னேற்றகரமான நிலையில் உள்ளது. இலங்கையானது தனது வளர்ச்சிக்காக தனது சொந்த நிதியை ஒதுக்கும் திறன் மிகவும் குறைவாக உள்ள வளரும் நாடுகளில் ஒன்றாகும். கடந்த மூன்று தசாப்தங்களாக தொடர்ச்சியாக அரசாங்கங்கள் மேற்கொண்ட முதலீட்டு சாதகமான கொள்கைகளால் இலங்கையின் FDI உட்பாய்ச்சல்கள் விரிவடைந்தன. இருப்பினும் இலங்கை இன்னும் தனது தெற்காசிய அண்டை நாடுகளுடன் ஒப்பிடும் போது குறிப்பிடத்தக்க அளவு FDI உட்பாய்ச்சலை தவறவிட்டுள்ளது. உதாரணமாக 2013ல் 2 பில்லியன் அமெரிக்க டொலர் FDI ஐ ஈர்ப்பதை இலக்காக நிர்ணயித்திருந்தது (US Department Of Stage Report, 2014). ஆனால் வெறுமனே 0.916 பில்லியன் அமெரிக்க டொலர்களை மட்டுமே பெற முடிந்தது. அதே போல 2022ல் 4 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்குமென இலக்கை தீர்மானித்தது (உலக வங்கி, 2018). ஆனால் 1.212 பில்லியன் அமெரிக்க டொலர்களை மட்டுமே பெற்றது. மேலும் உயர் பொருளாதார வளர்ச்சி கொண்ட இந்தியா மற்றும் சீனாவுக்கு இடையில் புவியியல் ரீதியாக மூலோபாயத் திறன் கொண்டிருந்த போதும் இலங்கையானது ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் FDIஐ உள்வாங்கும் தன்மை குறைவாகவே காணப்படுகின்றது. அதே நேரம் இலங்கையின் FDI ஐ நிர்ணயிக்கும் பிரதான காரணியான ஆட்சி முறைமையில் காலத்துக்கு காலம் ஏற்பட்டு வரும் மாறுபாட்டினையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும். ஊழல் கட்டுப்பாடு, அரசாங்க செயற்திறன், அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் வன்முறை இல்லாமை, ஒழுங்குமுறை தரம், பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் சட்ட விதி சிறப்பாக இருக்கும்போது ஆட்சி முறைமை நல்லாட்சி உடையதாக இருக்கும் என்று கூறப்படுகின்றது. இருப்பினும் இக் குறிகாட்டிகளானது இலங்கையில் அடிக்கடி தளம்பல் நிலைமையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் வெறுமனே ஆட்சி முறைமையின் தரம் மாத்திரமன்றி ஆட்சி முறமை அல்லாத மாறிகளையும் சேர்த்து பார்க்கும் போது தான் உண்மையான தாக்கத்தை கண்டறிய முடியும் என்பதனால் பணவீக்க வீதம் (Inflation Rate) மற்றும் சந்தை அளவு (Market Size) என்பனவும் எனது ஆய்வில் உள்ளடக்கப்படுகின்றது.

### ஆய்வின் நோக்கம்

பிரதான நோக்கமானது இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மீது ஆட்சி முறைமையின் தரத்தின் தாக்கத்தைக் கண்டறிதல். மற்றும் இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் ஆட்சி முறைமையின் தரத்திற்கும் இடையிலான குறுங்கால மற்றும் நீண்ட கால தொடர்புகளை மதிப்பிடல்.

### முன்னைய ஆய்வுகளின் மீளாய்வு

#### *கோட்பாட்டு ரீதியான ஆய்வுகளின் மீளாய்வு*

முதலாவதாக Raymond Vernon உற்பத்திச் சுழற்சி கோட்பாடு. உற்பத்தித் துறையில் இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு மேற்கு ஐரோப்பாவில் அமெரிக்க நிறுவனங்கள் மேற்கொண்ட சில

வகையான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை விளக்க 1966 ஆம் ஆண்டில் Vernon உற்பத்திச் சுழற்சி கோட்பாட்டை உருவாக்கினார். உற்பத்தி சுழற்சியில் இளமை, வளர்ச்சி, முதிர்ச்சி மற்றும் வீழ்ச்சி என்ற நான்கு நிலைகள் உள்ளன என்றார். Vernon இன் கூற்றுப்படி, முதல் கட்டத்தில் அமெரிக்காவில் உள்ள நிறுவனங்கள் புதிய தயாரிப்புக்களை உருவாக்கி உள்ளூர் நுகர்வுக்கும், வெளிநாட்டு சந்தைகளுக்கும் ஏற்றுமதி செய்தன. உற்பத்தி சுழற்சி கோட்பாட்டின் படி, ஐரோப்பாவில் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களுக்கு கேள்வி அதிகரித்துள்ளது. இதனால், அமெரிக்க நிறுவனங்கள் ஏற்றுமதி செய்ய தொடங்கியது. மேலும் தொழில்நுட்பத்தின் மூலம் இவர்களின் சர்வதேச வர்த்தகம் வளர்ச்சியடைந்தது. உற்பத்திச் சுழற்சி முதல் கட்டத்தில் இருக்கும் போது உற்பத்தியாளர்கள் புதிய தொழில்நுட்பங்களை மேற்கொள்ளுவதன் மூலம் நன்மைகளை பெறுகின்றனர். இதனால் உற்பத்தி அதிகரித்தது.  இதனால் அமெரிக்காவில் உள்ள நிறுவனங்களை ஐரோப்பிய நிறுவனங்களும் பின்பற்றத் தொடங்கின. இதன் காரணமாக வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதிகரித்துள்ளது என முன்வைத்தார். இக்கோட்பாட்டின் சாராம்சம் FDIயின் வளர்ச்சிக்கு தொழிநுட்பங்களின் வளர்ச்சி முக்கியமானது என்பதாகும்.

இரண்டாவதாக Itagaki (1981) மற்றும் Cushman (1985) ஆகியவர்களால் வெளிநாட்டு நேரடி முதலீட்டை விளக்க உருவாக்கப்பட்ட பூரண மூலதனச் சந்தைக்கான பரிமாற்ற வீதக் கோட்பாடானது உண்மையான பரிவர்த்தனை வீத அதிகரிப்பு வெளிநாட்டு நேரடி முதலீட்டைத் தூண்டியது என்பதையும், வெளிநாட்டு நாணய மதிப்பீடு வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் குறைத்துள்ளது என்பதையும் காட்டுகின்றன. அதாவது வெளிநாட்டு நாணய மதிப்பீடானது வெளிநாட்டு நேரடி முதலீட்டை 25% குறைக்க வழிவகுத்தது என்று Cushman குறிப்பிடுகிறார்.

மூன்றாவதாக வெளிநாட்டு நேரடி முதலீட்டுக்கான இடம் சார்ந்த அணுகுமுறை. ஒரு நாட்டின் இயற்கை வளங்கள், தொழிலாளர் கிடைக்கும் தன்மை, உள்ளூர் சந்தை அளவு, உட்கட்டமைப்பு மற்றும் தேசிய வளங்களை பற்றிய அரசாங்க கொள்கைகள் போன்ற ஒரு நாட்டின் தேசிய செல்வத்தை அடிப்படையாகக் கொண்டு நாடுகளில் FDIஐ வெற்றியை விளக்கியது. இதில் இரண்டு நாடுகளுக்கு இடையிலான FDI ஓட்டம் அதிக பட்சமாக இருக்கும் என்று கருதப்பட்டது. அந்த இரண்டு நாடுகள் புவியியல், பொருளாதார மற்றும் கலாச்சார ரீதியாக ஒத்திருந்தால் வளர்ச்சியின் அளவு,  பங்குதாரர் பாதுகாப்பு,  வர்த்தகத்தின் திறந்த தன்மை போன்ற மாறிகள் FDI ஓட்டத்தினை தீர்மானிக்கும் முக்கிய மாறிகளாக கருதப்பட்டன ( Popovici & Calin , 2014).

***செயலறிவு ரீதியான ஆய்வுகளின் மீளாய்வு***

Wanigasuriya (2022) என்பவர் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மீது நல்லாட்சியின் தரத்தின் தாக்கத்தை அறிந்து கொள்வதை நோக்கமாகக் கொண்டு 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய இரண்டாம் நிலை தரவுகளை பயன்படுத்தி தென்னாசிய நாடுகளை மையமாகக் கொண்டு  Generalized Method of Moments (GMM), Two Stage Least Squares (TSLS) ஆகிய நுட்பங்களை பயன்படுத்தி, நல்லாட்சியின் ஆறு குறிகாட்டிகளான VAC, GEF, REQ, ROL, COC, PSAV ஆகியவற்றை பயன்படுத்தி அரசாங்க செயற்திறன்(GEF),  பொறுப்பு மற்றும் கணக்கு காட்டும் தன்மை (VAC) மற்றும் சட்டத்தின் ஆட்சி (ROL) ஆகியவை FDIஐ எதிர்மறையாக பாதிக்கின்றன  என்பதனை கண்டறிந்தார்.

Najeh Bouchoucha மற்றும் Ismahen Yahaoui ஆகியோர் 2019 ஆபிரிக்காவின் 41 நாடுகளில் நல்லாட்சியின் தரத்தின் மூலம் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் பொருளாதார வளர்ச்சியில் தாக்கம் என்ற நோக்கில் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 வரையான காலப் பகுதியில் இரண்டாம் நிலை தரவுகளையும், Cointegration test Fully modified ordinary least square (FMOLS) , Dynamic ordinary least square ( DOLS ), The system Generalized Method of Moments ( S - GMM) ஆகிய மாதிரியை பயன்படுத்தி, நல்லாட்சி குறிகாட்டிகள் மற்றும் FDI இடையேயான தொடர்பு ஆபிரிக்க நாடுகளில் பொருளாதார வளர்ச்சியில் நேர்மறை மற்றும் புள்ளியியல் ரீதியாக குறிப்பிடத்தக்க விளைவை கொண்டிருப்பதாக முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

Anusha மற்றும் Vinayagathasan ஆகியோர் இணைந்து (2021) இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மீது ஆட்சி முறையின் தரத்தின் தாக்கத்தினை 1996 தொடக்கம் 2019 வரையான வருடாந்த கால தொடர் தரவுகளை பயன்படுத்தி, ARDL Bounds சோதனை முறையை பயன்படுத்தி VAC, GEF, COC என்பன வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தேறிய உட்பாய்ச்சல் மீது பொருள்ள வகையில் நேர்காணியை தாக்கத்தை கொண்டுள்ளன என்றும் கிறஞ்சர் காரண காரிய சோதனையின்படி வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தேறிய உட்பாய்ச்சலுடன் GEF மற்றும் ROL என்பன ஒரு வழி காரண காரியத் தொடர்பை கொண்டுள்ளன என்ற முடிவு பெறப்பட்டுள்ளது.

Udayanga என்பவரால் (2020) இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீடு தேறிய உட்பாய்ச்சல்களில் நல்லாட்சி குறியீடுகளின் தாக்கத்தை அடையாளம் காணும் நோக்கத்துடன் 1996 – 2017 வரையிலான காலப்பகுதிக்குரிய காலத்தொடர் இரண்டாம் நிலை தரவை பயன்படுத்தி OLS regression மாதிரியை பயன்படுத்தி FDI தேறிய உட்பாய்ச்சல்களுக்கும் பொறுப்பு மற்றும் கணக்கு காட்டும் தன்மை (VAC), அரசியல் ஸ்திர தன்மையும் வன்முறை இன்மையும் (PSAV), ஊழல் கட்டுப்பாட்டு சுட்டெண் (COC), அரசாங்க செயத்திறன் (GEF) , சட்டத்தின் ஆட்சி (ROL), ஒழுங்குமுறைத்தரம் (REQ) என்பன நேர்கணிய தாக்கம் செலுத்துவதாகவும் இலங்கையில் FDI உட்பாய்ச்சல்களில் மிக அதிகமாக நேர்கணிய தாக்கத்தை அரசாங்க செயற்திறன் மாறி கொண்டிருப்பதாகவும் முடிவுகள் பெறப்பட்டுள்ளது.

Vijesandiran மற்றும் Vinayagathasan (2020) என்பவர்கள் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தேறிய உட்பாய்ச்சல்களில் பொருளாதார மற்றும் பொருளாதாரமற்ற மாறிகளின் தொடர்பு மற்றும் தாக்கத்தை அடையாளங் காண்பதை நோக்கமாகக் கொண்டு 1996 –2017 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய காலத்தொடர் தரவுகளைப் பயன்படுத்தி ஆய்வொன்றை மேற்கொண்டுள்ளனர். இவ்வாய்வில் ARDL Bounds சோதனை முறை தரவுப்பகுப்பாய்வுக்கு பயன்படுத்தப்பட்டு முதலீட்டினை உள்ளீர்க்கும் நாடுகளின் நாணயமாற்று வீதத்தின் அதிகரிப்பு, வட்டி வீத உயர்வு, கூலி வீத உயர்வு மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மெய்ப் பெறுமதி ஆகியவை நீண்ட காலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மீது நேர்கணியத் தாக்கத்தினைச் செலுத்துகின்றன எனவும் அரசியல் உறுதியற்ற தன்மை, பணவீக்க வீதம் மற்றும் வர்த்தகத்தின் திறந்த தன்மை ஆகியவை நீண்ட காலத்தில் FDI இனை எதிர்கணியமாகப் பாதிக்கின்றன எனவும் ஊழல் அதிகரிப்பு மற்றும் நிறுவன வரி ஆகியவை FDI இனை எதிர்பார்த்தபடி குறைக்கின்ற போதும் இதன் விளைவு நீண்ட காலத்திற்கு புள்ளிவிபர ரீதியாக முக்கியம் வாய்ந்ததாக இல்லை எனவும் அதேவேளை குறுங்காலத்தில் எந்தவொரு மாறியும் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மீது புள்ளிவிபர ரீதியில் பொருளுள்ள தாக்கத்தினைச் செலுத்தவில்லை எனவும் முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

Wijeweera மற்றும் Mounter (2008) ஆகியோர் VAR (Vector Auto regressive methods), பயன்படுத்தி இலங்கையில் சார்ந்த மாறியாக வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல்களையும் சாரா மாறியாக சந்தை அளவு, வர்த்தகத்தின் திறந்த தன்மை, ஊழியர் செலவு, பரிமாற்ற விகிதம், வட்டி விகிதம் போன்றவற்றைப் பயன்படுத்தி நீண்ட காலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மீது ஊழியர் செலவு எதிர்க்கணிய தாக்கத்தையும் வட்டி வீதம் மற்றும் வர்த்தகத்தின் திறந்த தன்மை நேர்கணிய தாக்கத்தையும் கொண்டிருப்பதாக முடிவுகள் பெறப்பட்டன.

Ravinthirakumaran மற்றும் பலர் இணைந்து (2015) இலங்கைக்குள் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உள்வருகையை நிர்ணயிக்கின்ற காரணிகளை அடையாளம் காண்பதை நோக்காகக் கொண்டு 1978–2013 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரிய வருடாந்தத் தரவுகளைப் பயன்படுத்தி ஓர் ஆய்வினை மேற்கொண்டுள்ளனர். இவ்வாய்வில் ARDL Bounds சோதனை, அலகுமூலச் சோதனை, CUSUM and CUSUMSQ சோதனைகள் போன்ற காலத் தொடர் பகுப்பாய்வின் பொருளியலளவை நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வர்த்தக திறந்ததன்மை, உட்கட்டமைப்பு தரம் ஆகியவை FDI இல் நேர்கணியத் தாக்கத்தையும், கூலி மற்றும் அரசியல் ஸ்திரமற்ற தன்மை என்பன வெளிநாட்டு நேரடி முதலீட்டில் எதிர்கணியத் தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன என்று முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**தரவு, மாறிகள் மற்றும் ஆய்வு முறையியல்**

இந்த ஆய்வு 1996–2022 காலப்பகுதியில் இலங்கையின் வருடாந்த தரவுகளைப் பயன்படுத்தி வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மீது ஆட்சி முறைமையின் தரத்தின் தாக்கத்தை ஆராய்கிறது. தேர்தெடுக்கப்பட்ட மாறிகளுக்கான தரவு இருப்பதால் கால அளவு மேலே குறிப்பிட்ட காலத்திற்குள் வரையறுக்கப்பட்டுள்ளது. ஆளுகையின் தரத்தை மதிப்பிடுவதற்கு மாறிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன் அரசாங்க செயற்திறன் (GEF), சட்டத்தின் ஆட்சி (ROL), ஊழல் கட்டுப்பாட்டுச் சுட்டெண் (COC), அரசியல் ஸ்திரத்தன்மையும் வன்முறையின்மையும் (PSAV). இவற்றின் தரவுகள் உலக வங்கியின் உலக ஆட்சி குறிகாட்டித் தரவுத் தளத்தில் (World Governance Indicators) இருந்தும், ஆளுகையல்லா மாறிகளான பணவீக்க வீதம் (INF), சந்தை அளவு (POP) ஆகியனவும் மற்றும் சார்ந்த மாறியான வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தேறிய உட்பாய்ச்சல் (FDINI) போன்ற மாறிகளின் தரவுகளானது உலக வங்கியின் உலக அபிவிருத்தி அறிக்கை (World Development indicators) என்ற தரவுத் தளத்தில் இருந்து சேகரிக்கப்பட்டுள்ளது. எமது ஆய்வுக்கான பொதுவான பிற்செலவுச் சமன்பாடு பின்வருமாறு வரையறுக்கப்படும்.

$$FDINI_t = \alpha_0 + \alpha_1 GEF_t + \alpha_2 ROL_t + \alpha_3 COC_t + \alpha_4 PSAV_t + \alpha_5 INF_t + \alpha_6 POP_t + \mu_t \qquad (1)$$

இங்கு, $\alpha_0$ என்பது ஒரு மாறிலி மற்றும் $\alpha_1, \alpha_2, \alpha_3, \alpha_4, \alpha_5, \alpha_6$ என்பது சார்ந்த மாறிக்கான சாரா மாறியின் பரமானங்கள் மற்றும் $\mu_t$ என்பது தீங்கற்ற வழு உறுப்பு ஆகும். இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தேறிய உட்பாய்ச்சல்(FDINI), அரசாங்க செயற்திறன்(GEF), சட்டத்தின் ஆட்சி (ROL), ஊழல் கட்டுப்பாட்டு சுட்டெண் (COC), அரசியல் ஸ்திரத்தன்மையும் வன்முறை இன்மையும்(PSAV), பணவீக்க வீதம்(INF), சந்தை அளவு (Population).

பகுப்பாய்வு நுட்பங்களில் முதலாவதாக ADF அலகு மூலச்சோதனை தரவுதொடரின் நிலைத்த தன்மையை சோதிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. I(0) மற்றும் I(1) என்றவாறு மாறிகள் நிலைத்த தன்மையுடையதாக இருந்தால் Autoregresive Distributed Lag (ARDL) மாதிரி பயன்படுத்தப்படும். இம் மாதிரி பெசரன் மற்றும் பலரால் 2001ல் உருவாக்கப்பட்டது. சமன்பாடு (1) இன் ARDL வடிவம் பின்வருமாறு வரையறுக்கப்படும்.

$$\Delta FDINI_t = \beta_0 + \beta_1 FDINI_{t-1} + \beta_2 GEF_{t-1} + \beta_3 ROL_{t-1} + \beta_4 COC_{t-1} + \beta_5 PSAV_{t-1} + \beta_6 INF_{t-1} + \beta_7 POP_{t-1} + \sum_{i=1}^{q1} p_{1i}\, \Delta FDINI_{t-i} + \sum_{i=1}^{q2} p_{2i}\, \Delta GEF_{t-i} + \sum_{i=1}^{q3} p_{3i}\, \Delta ROL_{t-i} + \sum_{i=1}^{q4} p_{4i}\, \Delta COC_{t-i} + \sum_{i=1}^{q5} p_{5i}\, \Delta PSAV_{t-i} + \sum_{i=1}^{q6} p_{6i}\, \Delta INF_{t-i} + \sum_{i=1}^{q7} p_{7i}\, \Delta POP_{t-i} + \varepsilon_t \qquad (2)$$

**இங்கு, $\Delta$ - முதலாம் வித்தியாச இயக்கி , $\beta_0$ - இடைவெட்டு , $\varepsilon_t$ – தீங்கற்ற வழு உறுப்பு. $\beta_1 \rightarrow \beta_7$- நீண்ட கால தொடர்பை விளக்கும் குணகங்கள், $p_{1i} \rightarrow p_{7i}$ - குறுங்கால இயங்குநிலை தொடர்பை விளக்கும் குணகங்கள், $FDINI_{t-1}$, $GEF_{t-1}$, $ROL_{t-1}$, $COC_{t-1}$, $PSAV_{t-1}$, $INF_{t-1}$, $POP_{t-1}$ என்பன மாதிரியுருவில் பயன்படுத்தப்பட்ட மாறிகளின் முதலாவது காலதாமதப் பெறுமதி ஆகும். $\Delta FDINI_{t-i}$, $\Delta GEF_{t-i}$, $\Delta ROL_{t-i}$, $\Delta COC_{t-i}$, $\Delta PSAV_{t-i}$, $\Delta INF_{t-i}$, $\Delta POP_{t-i}$ என்பன விளக்கு மாறிகளின் முதலாம் வித்தியாச காலதாமத மாறிகளாகும்.**

ARDL மாதிரியுருவின் வழுச்சரிப்படுத்தல் வடிவத்தினைப் பயன்படுத்தி குறுங்கால மற்றும் நீண்டகாலத் தொடர்புகளை ஏககாலத்தில் மதிப்பிட முடியும். வழுச்சரிப்படுத்தல் மாதிரியுருவானது மாறிகளுக்கிடையிலான குறுங்காலத் தொடர்புகளையும் மாதிரியுரு எவ்வாறு குறுங்காலத்தில் எதிர்பாராத விதமாக இடம்பெறும் வெளிவாரி அதிர்ச்சிகளிலிருந்து குறுங்கால சமனிலையின்மையை நீண்டகாலத்தில் நிலைத்த சமநிலையினை நோக்கி சரிப்படுத்தப்படுகிறது என்பதையும் காட்டுகிறது. வழுச்சரிப்படுததல் மாதிரியுரு பின்வருமாறு வரையறை செய்யப்படும்.

$$\Delta FDINI_t = \theta_0 + \sum_{i=1}^{q1} \theta_{1i}\, \Delta FDINI_{t-i} + \sum_{i=1}^{q2} \theta_{2i}\, \Delta GEF_{t-i} + \sum_{i=1}^{q3} \theta_{3i}\, \Delta ROL_{t-i} + \sum_{i=1}^{q4} \theta_{4i}\, \Delta COC_{t-i} + \sum_{i=1}^{q5} \theta_{5i}\, \Delta PSAV_{t-i} + \sum_{i=1}^{q6} \theta_{6i}\, \Delta INF_{t-i} + \sum_{i=1}^{q7} \theta_{7i}\, \Delta POP_{t-i} + \lambda ECT_{t-1} + e_t \qquad (3)$$

இங்கு $\lambda$ என்பது சரிப்படுத்தல் வேகக் குணகம் ஆகும். இது நீண்டகாலச் சரிப்படுத்தலினை அளவிடுகின்றது. இக் குணகம் விளக்குவது யாதெனில் எதிர்பாராத விதமாக இடம்பெறும் வெளிவாரி அதிர்ச்சிகளின் காரணமாக இடம்பெறும் குறுங்காலச் சமனிலையின்மையானது நீண்டகாலச் சமனிலையை நோக்கித் திரும்பும் வேகத்தைக் குறிப்பிடுகிறது. என்பது வழுவினது முதலாவது காலதாமதப் பெறுமதியாகும்.

## பெறுபேறுகள் மற்றும் கலந்துரையாடல்

### ADF அலகு நூலச் சோதனையின் பெறுபேறுகள்

**அட்டவணை 5.1. ADF அலகு மூலச் சோதனையின் பெறுபேறுகள்**


| மாறிகள் | ADF சோதனை (இடைவெட்டு மட்டும்) | | Order of the Intergration |
|---|---|---|---|
| | மட்டம் | 1ம் வித்தியாசம் | |
| **FDINI** | 0.0512 | **0.0003*** ** | I(I) |
| **GEF** | 0.1555 | **0.0199** ** | I(1) |
| **ROL** | 0.0993 | **0.0009*** ** | I(1) |
| **COC** | 0.2449 | **0.0061*** ** | I(1) |
| **PSAV** | **0.0361** ** | 0.0258** | I(0) |
| **INF** | 0.3199 | **0.0384** ** | I(1) |
| **POP** | **0.0087*** ** | 0.0000*** | I(0) |

மூலம் : E-viwes 10 மென்பொருள் மூலம் ஆய்வாளரால் கணிப்பிடப்பட்டது.

குறிப்பு : *, **, *** என்பன முறையே 10%, 5%, 1% பொருளுண்மை மட்டங்களில் மாறிகள் நிலைத்தன்மை உடமையினை பூர்த்தி செய்கின்றன என்பதைக் குறிக்கின்றன. அட்டவனையில் நிகழ்தகவுப் பெறுமதிகள் தரப்பட்டுள்ளன.

Augented Dickey- Fuller (ADF) சோதனை முடிவுகளின் படி முதலில் மட்டத்தில் PSAV, POP ஆகிய மாறிகள் 5% பொருளுண்மை மட்டத்தில் அலகு மூலத்தை கொண்டிருக்கவில்லை. அதாவது நிலைத்தன்மையைக் கொண்டுள்ளன. மாறாக ஏனைய மாறிகளான FDINI, GEF, ROL, COC, INF ஆகியவை 5% பொருளுண்மை மட்டத்தில் முதலாம் வித்தியாசத்தில் நிலைத்தன்மையைக் கொண்டுள்ளன. தொகுத்து நோக்கும் போது ADF சோதனையின் படி PSAV, POP மாறிகளானது I(0) ஆகவும் ஏனைய FDINI, GEF, ROL, COC, INF மாறிகளானது I(1) ஆகவும் காணப்படுகின்றது.

வரைபடம் 1. உத்தம காலதாமத மட்ட சோதனையின் பெறுபேறுகள் (AIC)




மூலம் : E-viwes 10 மென்பொருள் மூலம் ஆய்வாளரால் கணிப்பிடப்பட்டது.

மேலுள்ள வரைபடம் விளக்குவது யாதெனில் AIC தகுதிவிதியின் படி முதல் 20 சிறந்த மாதிரியுருவில் குறைந்த வழுப் பெறுமதியைக் கொண்ட ARDL (3,0,0,1,0,0,0) எனும் மாதிரியுருவே சிறந்த மாதிரியுருவாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

அட்டவணை 2 : உறுதிப்படுத்தல் பரிசோதனைகள்

| **சோதனைகள்** | **Probability Value** |
|---|---|
| தன்னினைவுப் பிரச்சினைக்கான Bruesch-Godfrey LM சோதனை | 0.1294 |
| செவ்வன் தன்மைக்கான JarQue-Bera சோதனை | 0.5604 |
| பல்பரவல் தன்மை பிரச்சினைக்கான White சோதனை | 0.0701 |
| நீக்கப்பட்ட மாறிகளுக்கான Ramsey யினது RESET சோதனை | 0.5600 |

மூலம் : E-viwes 10 மென்பொருள் மூலம் ஆய்வாளரால் கணிப்பிடப்பட்டது.

தன்னிணைவுப் பிரச்சினை காணப்படுகின்றதா? என்பதைக் கண்டறிவதற்கான சோதனையின் (LM Test) பெறுபேறுகளை நோக்கும்போது நிகழ்தகவுப் பெறுமதியானது 5% பொருளுண்மை

மட்டப் பெறுமதியை விட (0.1294 > 0.05) அதிகமாக இருப்பதால் மாதிரியுருவில் தன்னிணைவுப் பிரச்சினை இல்லை என்ற சூனியக்கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆகவே இங்கு தன்னிணைவுப் பிரச்சினை இல்லை என்ற முடிவு பெறப்பட்டுள்ளது. அடுத்து, வழுவிற்கான செவ்வன் தன்மை பெறுபேற்றினை நோக்கும் போது இங்கு நிகழ்தகவுப் பெறுமதியானது 5% பொருளுண்மை மட்டத்தினை விட (0.5604 > 0.05) அதிகமாக இருப்பதால் வழுவானது செவ்வன்னாகப் பரம்பியுள்ளது எனும் சூனியக்கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆகவே இவ்வாய்வின் மாதிரியுருவில் வழுவானது செவ்வன்னாகப் பரம்பியிருக்கின்றது எனலாம். மாதிரியுருவில் நீக்கப்பட்ட மாறிகள் உண்டா? அல்லது இல்லையா? என்பதற்கான Ramsey யினது சோதனையின் பெறுபேற்றினை நோக்கும்போது, நிகழ்தகவுப் பெறுமதியானது 5% பொருளுண்மை மட்டப் பெறுமதியை விட (0.5600 > 0.05) அதிகமாக இருப்பதால் சூனியக்கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆகவே 5மூ பொருளுண்மை மட்டத்தில் மாதிரியுருவில் நீக்கப்பட்ட மாறிகள் எதுவும் இல்லை எனலாம்.அடுத்துஇ வழு மாறற்றிறனுக்கான உடமையின் பெறுபேற்றினை நோக்கும்போது, நிகழ்தகவுப் பெறுமதியானது 5% பொருளுண்மை மட்டப் பெறுமதியை விட (0.0701 > 0.05) அதிகமாக இருப்பதால் வழு மாறற்றிறன் ஓரினத்தன்மை வாய்ந்தது எனும் சூனியக்கருதுகோள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. ஆகவே இங்கு பல்பரவல்தன்மைப் பிரச்சினை இல்லை எனும் முடிவு பெறப்பட்டுள்ளது.

அட்டவணை 3 : ARDL Bounds சோதனையின் பெறுபேறுகள்

| Test Statistic | Value | Significance Level | I(0) | I(1) |
|---|---|---|---|---|
| F-statistic | 3.334504 | 10% | 1.99 | 2.94 |
| k | 6 | 5% | 2.27 | 3.28 |
| | | 2.5% | 2.55 | 3.61 |
| | | 1% | 2.88 | 3.99 |

மூலம் : E-viwes 10 மென்பொருள் மூலம் ஆய்வாளரால் கணிப்பிடப்பட்டது.

இப் பெறுபேற்றின் படி 5% பொருளுண்மை மட்டத்தில் கு புள்ளிவிபரமானது (3.334504) மேல் எல்லைப் பெறுமதியை விட (3.28) பெரிதாகக் காணப்படுவதால் மாறிகளிற்கிடையே கூட்டு ஒருங்கிணைவுத் தொடர்பு இல்லை என்ற சூனியக்கருதுகோள் நிராகரிக்கப்படுகின்றது. ஆகையால் மாறிகளுக்கிடையே கூட்டு ஒருங்கிணைவுத் தொடர்பு இருப்பது இங்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அட்டவணை 4: நீண்டகாலத் தொடர்புகளின் பெறுபேறுகள்

| **சார்ந்த மாறி : FDINI** | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| GEF | ROL | COC | PSAV | INF | POP | $R^2$ |
| 0.033325 | 0.006268 | -0.042646 | -0.014610 | -0.003047 | 0.000696 | 0.824338 |
| (0.0018)*** | (0.5568) | (0.0112)** | (0.0001)*** | (0.2981) | (0.9880) | |

மூலம் : E-viwes 10 மென்பொருள் மூலம் ஆய்வாளரால் கணிப்பிடப்பட்டது.

சாரா மாறியான அரசாங்க செயற்றிறன் (GEF) 1% பொருளுண்மை மட்டத்தில் புள்ளிவிபர ரீதியாகப் பொருளுள்ள வகையில் தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் மீது நேர்க்கணியத் தாக்கத்தைச் செலுத்துகின்றது அதாவது ஏனைய காரணிகள் மாறாத நிலையில் அரசாங்க செயற்றிறன் ஒரு அலகால் அதிகரித்தால் நீண்ட காலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சலானது 0.033325 அலகால் அதிகரிக்கும் எனலாம். அடுத்து, 5% பொருளுண்மை மட்டத்தில் ஊழல் கட்டுப்பாட்டுச் சுட்டெண்ணானது தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் மீது பொருளுள்ள வகையில் எதிர்க்கணியத் தாக்கத்தை செலுத்துகின்றது அதாவது ஏனைய காரணிகள் மாறாத நிலையில் ஊழல் கட்டுப்பாட்டுச் சுட்டெண் ஒரு அலகால் அதிகரித்தால் நீண்ட காலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சலானது 0.042646 அலகால் குறைவடையும் எனலாம். இது விளக்குவது யாதெனில் இலங்கையில் ஊழலானது மேலும் அதிகரிக்குமாக இருந்தால் (உலக ஊழல் தரவரிசையில் அதிகரிப்பு ஏற்படுதல்) இலங்கையில் தேறிய வெளிநாட்டு நேரடி முதலீடு மேலும் குறைவடையும் என்பதாகும். அடுத்துஇ 1% பொருளுண்மை மட்டத்தில் அரசியல் ஸ்த்திரத்தன்மை மற்றும் வன்முறை இன்மையானது தேறிய வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல் மீது பொருளுள்ள வகையில் எதிர்க்கணியத் தாக்கத்தை செலுத்துகின்றது எனலாம். அதாவது ஏனைய காரணிகள் மாறாத நிலையில் அரசியல் ஸ்த்திரத் தன்மையும் வன்முறை இன்மையும் ஒரு அலகால் அதிகரித்தால் நீண்ட காலத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சலானது 0.014610 அலகால் குறைவடையும் எனலாம். இது விளக்குவது யாதெனில் இலங்கையில் அரசியல் ஸ்த்திரமின்மையும் வன்முறையும் மேலும் அதிகரிக்குமாக இருந்தால் (உலக அரசியல் ஸ்த்திரமின்மையும் வன்முறையும தரவரிசையில் அதிகரிப்பு ஏற்படுதல்) இலங்கையில் தேறிய வெளிநாட்டு நேரடி முதலீடு மேலும் குறைவடையும் என்பதாகும்.

அட்டவணை 5: ARDL(3,0,0,1,0,0,0) மாதிரியுருவின் குறுங்காலத் தொடர்பு மற்றும் வழுச்சரிப்படுத்தல் மாதிரியுருவின் பெறுபேறுகள்

| **சார்ந்த மாறி : D(FDINI)** | | | |
|---|---|---|---|
| மாறிகள் | காலதாமத வரிசை (lag Order) | | |
| | 0 | 1 | 2 |
| D(FDINI) | | 1.808271(0.0001)*** | 1.580805(0.0011)*** |
| D(COC) | -0.070228 (0.0029)*** | | |
| Coint Eq(-1) | -0.918227 (0.0000)*** | | |
| R-Squared | 0.843234 | | |
| Adjusted R-squared | 0.813841 | | |

மூலம் : E-viwes 10 மென்பொருள் மூலம் ஆய்வாளரால் கணிப்பிடப்பட்டது.

**Note: Significant levels at 1%-***, 5%- **, 10%-* respectively.**

வழுச்சரிப்படுத்தல் பதத்தின் [Coint Eq(-1)] குணகம் எதிர்க்கணியமாகவும் 1% பொருளுண்மை மட்டத்தில் புள்ளிவிபர ரீதியாக பொருளுண்மை வாய்ந்ததாகக் காணப்படுவது விளக்குவது யாதெனில் வெளிவாரி அதிர்ச்சிகள் இடம்பெற்று ஒரு வருடத்தின் பின்னர் ஒவ்வொரு வருடமும் குறுங்காலச் சமனிலையின்மையானது நீண்டகாலச் சமநிலையை நோக்கி 92% இனால் சரிப்படுத்தப்படுகின்றது மேலும் R-squared மதிப்பு (0.843234) என்பது சார்பு மாறிகளின் பொருத்தப்பாட்டினை 84% மாதிரியால் விளக்கப்படுகிறது. சரிப்படுத்தப்பட்ட சு–ளஙரயசநன

(0.813841) மாதிரியில் உள்ள காலதாமதங்களின் எண்ணிக்கையை குறிப்பிடுகின்றது. இது வலுவான ஒட்டுமொத்த பொருத்தப்பாட்டினைக் குறிக்கின்றது. அடுத்து மாறிகளுக்கிடையிலான குறுங்காலத் தொடர்பை நோக்குவோமாயின் நிகழ்கால வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தேறிய உட்பாயச்சல் மீது 1வருட கடந்தகால வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தேறிய உட்பாய்ச்சல் (FDINI-1) ஆனது குறுங்காலத்தில் 1% பொருளுண்மை மட்டத்தில் பொருளுள்ள வகையில் நேர்க்கணியத் தாக்கம் செலுத்துகிறது. அதாவது ஏனைய காரணிகள் மாறாத நிலையில் 1 வருட கடந்தகால வெளிநாட்டு நேரடி முதலீடு ஒரு அலகால் அதிகரித்தால் குறுங்காலத்தில் நிகழ்கால வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல் (FDINI) 1.808271 அலகால் அதிகரிக்கும் எனலாம். அத்துடன்இ நிகழ்கால வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தேறிய உட்பாயச்சலின் மீது 2 வருட கடந்தகால வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தேறிய உட்பாய்ச்சல் (FDINI-2) ஆனது குறுங்காலத்தில் 1ூ பொருளுண்மை மட்டத்தில் பொருளுள்ள வகையில் நேர்க்கணியத் தாக்கம் செலுத்துகிறது. அதாவது ஏனைய காரணிகள் மாறாத நிலையில் 2வருட கடந்த கால வெளிநாட்டு நேரடி முதலீடு ஒரு அலகால் அதிகரித்தால் குறுங்காலத்தில் நிகழ்கால வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல் (FDINI) 1.580805 அலகால் அதகரிக்கும் எனலாம். மேலும்இ நிகழ்கால வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தேறிய உட்பாயச்சலின் மீது நிகழ்கால ஊழல் கட்டுப்பாட்டுச் சுட்டெண் (COC) ஆனது குறுங்காலத்தில் 1% பொருளுண்மை மட்டத்தில் பொருளுள்ள வகையில் எதிர்க்கணியத் தாக்கம் செலுத்துகின்றது. அதாவது ஏனைய காரணிகள் மாறாத நிலையில் நிகழ்கால ஊழல் கட்டுப்பாட்டுச் சுட்டெண் ஒரு அலகால் அதிகரித்தால் குறுங்காலத்தில் நிகழ்கால வெளிநாட்டு நேரடி முதலீட்டின் உட்பாய்ச்சல் (FDINI) 0.070228 அலகால் குறைவடையும் எனலாம். இது விளக்குவது யாதெனில் இலங்கையில் ஊழலானது மேலும் அதிகரிக்குமாக இருந்தால் (உலக ஊழல் தரவரிசையில் அதிகரிப்பு ஏற்படுதல்) இலங்கையில் நிகழ்கால தேறிய வெளிநாட்டு நேரடி முதலீடு மேலும் குறைவடையும் என்பதாகும். ஏனைய மாறிகளான GEF, ROL, PSAV, INF, POP என்பன குறுங்காலத்தில் குனுஐஜே இன் நிகழ்காலப் பெறுமதி மீது எவ்வித தாக்கமும் செலுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுகள் மற்றும் கொள்கைப் பரிந்துரைகள்**

இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மீது ஆட்சி முறைமையின் தரத்தின் தாக்கத்தினைக் கண்டறியும் இப் பொருளியலளவைப் பகுப்பாய்வானது கொள்கை வகுப்பாளர்களிற்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியினை மேம்படுத்துவதிலும் அந்த நாட்டின் பொருளாதாரத்தினை அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்துவதிலும் முக்கியமானதொரு திறவுகோலாக இருப்பது வெளிநாட்டு நேரடி முதலீடேயாகும். இலங்கை அனுபவத்தை நோக்கும் போது வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரிப்பதற்காக அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன் இயற்கையாகவும் அதற்கான பல வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. எனினும் ஏனைய அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளுடன் ஒப்பிடும் போது இலங்கையின் தேறிய வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் உள்வருகையும் பயன்பாடும் மிகக்குறைந்த மட்டத்திலேயே உள்ளதுடன் இலங்கையில் FDI தளம்பல் நிலையிலான அதிகரித்துக் கொண்டு செல்லும் போக்கினையே காட்டுகின்றது. அதேவேளை அண்மைக் காலங்களில் ஏனைய நாடுகளில் ஆட்சி முறைமையின் தரமானது வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மீது பிரதான தாக்கம் செலுத்துவதாகக் கூறப்படுகின்றது. மேலும், இலங்கையில் அடிக்கடி ஏற்படுகின்ற ஆட்சி மாற்றங்களும் புதிதாக ஆட்சியமைக்கும்

அரசாங்கங்களும் அவ்வப்போது அமுல்படுத்தி வருகின்ற பொருளாதாரக் கொள்கைகளும் அரசியலில் ஒரு நிலையற்ற தன்மையைக் காட்டுவதோடு இலங்கையின் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும், ஆட்சி முறைமையின் தரத்திற்கும் இடையில் ஒரு தெளிவற்ற நிலைமையையே காட்டுகின்றது. ஆகவே, இலங்கையில் வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் ஆட்சி முறைமையின் தரத்திற்கும் இடையில் எத்தகைய தொடர்பு காணப்படுகின்றது என்பதைக் கண்டறிதல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இலங்கையில் ஆட்சி முறைமையின் தரமானது வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மீது எவ்விதமான தாக்கத்தினைக் கொண்டுள்ளது என்பதனை இவ்வாய்வு மூலம் அறியமுடிவதுடன், ஆட்சி முறைமையின் தரத்தினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல், ஆட்சி முறைமையின் தரத்தில் சீர்திருத்தங்களை ஏற்படுத்துதல் மற்றும் ஆட்சி முறைக் கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தல் ஆகியவற்றின் மூலம் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை அதிகரிக்கவும் இவ்வாய்வின் முடிவுகள் உதவும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் எதிர்காலத்தில் ஒரு அரசாங்கம் எவ்வாறு திறமையாகச் செயற்பட வேண்டும் என்றும் வெளிநாட்டு நேரடி முதலீடுகளினை அதிகம் கவருவதற்கான வழிகளைக் கண்டறியவும் இவ்வாய்வு உதவுவதுடன் இலங்கைப் பொருளாதார அபிவிருத்தித் திட்டமிடலுக்கும் இன்றியமையாததொன்றாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆய்வின் முடிவுகளை தொகுத்து நோக்குவோமாளின், நீண்டகாலத்தில் 1% பொருளுண்மை மட்டத்தில் FDINI உடன் அரசாங்க செயற்றிறன் (GEF) நேர்க்கணிய தொடர்பையும்இ அரசியல் ஸ்த்திரத்தன்மையும் வன்முறையின்மையும் (PSAV) எதிர்க்கணிய தொடர்பையும் கொண்டுள்ளதுடன் 5% பொருளுண்மை மட்டத்தில் ஊழல் கட்டுப்பாட்டுச்சுட்டெண் (COC) எதிர்க்கணிய தொடர்பையும் கொண்டுள்ளன. அத்தோடு குறுங்காலத்தில் சார்ந்த மாறியான வெளிநாட்டு நேரடி முதலீட்டின் தேறிய உட்பாய்ச்சல்(FDINI) இன் நிகழ்காலப் பெறுமதி மீது FDINI-1 மற்றும் FDINI-2 என்பன 1% பொருளுண்மை மட்டத்தில் குறுங்காலத்தில் நேர்க்கணிய தொடர்பையும் COC 1% பொருளுண்மை மட்டத்தில் குறுங்காலத்தில் எதிர்க்கணியத் தொடர்பை கொண்டுள்ளது. எனவே, வெளிநாட்டு நேரடி முதலீட்டினை உள்ளீர்க்க ஆட்சிமுறைமையின் தரத்தினை ( GEF, COC, PSAV) ஒரு கருவியாக பயன்படுத்தலாம் என்பதனை இம் முடிவுகள் உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளன.

ஆட்சிமுறைமையின் தரத்தினை அதிகரிப்பதனால் தேறிய வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிகரிப்பதோடு பொருளாதார அபிவிருத்தியின் அடிப்படை அம்சங்களைத் தூண்டுவதற்கும், தேறிய வெளிநாட்டு நேரடி முதலீட்டிற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் ஏற்படும் அச்சுறுத்தல்களைத் தவிர்த்துக் கொள்வதற்கும் இவ்வாய்வு உதவும் என நம்பப்படுகின்றது அந்தவகையில் இலங்கையில் உயர் பதவிகளில் இருப்பவர்களிடம் அதிகாரம் குவிநதிருப்பதால் ஊழல்களில் ஈடுபடுகின்றனர். இதனால் நாட்டின் முதலீட்டை பெறறுக் கொள்வதில் சிக்கல் ஏற்படுகிறது. இவர்களின் அதிகாரத்தை பரவலாக்குவதன் மூலம் இச் சிக்கல்களைக் குறைத்துக் கொள்ளலாம் என இவ்வாய்வு பரிந்துரைக்கின்றது. அரசாங்கம் பல்வேறு வகையான ஊழல்களை விசாரிக்க ஜனாதிபதி கமிஸன்கள் மற்றும் பிற நிறுவன கட்டமைப்புகளை நிறுவுவதன் மூலம் ஊழலை ஒழிப்பதற்கும் ஆட்சியை மேம்படுத்துவதற்கும் பல கொள்கை சாத்தியங்களைக் கொண்டு வரவேண்டும். இலங்கை அரசாங்கம் அனைத்துத் துறையிலும் ஊழலுக்கு எதிராகப்போராடுவதன மூலம் வெளிப்படைத் தன்மையை ஊக்குவிக்க வேண்டும். மேலும் பொதுத்துறை வினைத்திறன் மற்றும் விளைதிறன் மூலம் நிர்வாகத்தின் தரத்தை மேம்படுத்துதல், குடிமக்களின் கோரிக்கைகள் மற்றும் அபிலாசைகளுக்கு இத்துறையை மேலும் பதிலளிக்க வைப்பது , பொதுச் செலவினங்களைக்

குறைத்தல் மற்றும் அரசியல் மற்றும் நிரவர்க பொறுப்புணர்வை மேம்படுத்துதல் தொடர்பில் கொள்கை வகுப்பாளரகள் கவனத்தில் கொள்ள வேண்டும். நாட்டில் பக்கசார்பற்ற முறையில் சட்டங்கள் ஆக்கப்பட்டு சமூக அந்தஸ்து மற்றும் அதிகாரம் போன்றன பார்க்கப்படாமல் அவை நிலைநாட்டப்பட்டு , சட்டவிதிகளிலிருந்து விலகாத ஆட்சியும் நிலை நாட்ட வேண்டும். இவ்வாய்வில் பகுப்பாய்வு செய்யப்பட்ட ஆட்சி முறைமை மற்றும் ஆட்சி முறைமையல்லா குறிகாட்டிகள் தொடர்பான பிரச்சினைகளை நிவரத்தி செய்வதன் மூலம் முதலீடுகளுக்கு மிகவும் கவரச்சிகரமான மற்றும் செயலபடுத்தும் சூழலை இலங்கை உருவாக்க முடியும் என பரிந்துரைக்கிறது. இதற்கு பணவீக்க வீதம், சந்தை அளவு, சட்டத்தின ஆட்சி இ ஊழல் போன்றவற்றில் உள்ள கொள்கைகளை இலங்கை மறுசீரமைக்க வேண்டும். அரசு தனது தேறிய வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கொள்கை தொடர்பான தீர்மானங்கள் மற்றும் ஆட்சிமுறைமையின் தரம் தொடர்பான கொள்கை வகுப்புக்களின் போது நீண்டகால இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வேண்டும் என இவ் ஆய்வு பரிந்துரை செய்கின்றது.

**சான்றாதாரப் பட்டியல்**


Anusha, P. and Vinayagathasan, T. (2021). The impact of quality of governance on foreign direct investment: Empirical evidence from Sri Lanka. Sri Lanka economic journal, 18(1), pp. 53-71.

Aloui, Z.(2019). Governance and foreign direct investment: A comparative study between Arab Maghreb countries and ASEAN. MPRA Working Paper, No. 95835.

Afridi, A.G. and Shah, M.H. (2015). Significant of Good Governance for FDI Inflows in SAARC Countries. Business & Economic Review , 8(2) , pp. 31-52.

Bouchoucha, N .Yahyaoui, I. (2019). Governance and FDI: A Comparative Analysis between Low and Middle Income African Countries. Economics Bulletin, 39(4), pp.2711-2725.

Central Bank of Sri Lanka, (2017). Annual Report, Colombo: Central Bank of Sri Lanka.

Central Bank of Sri Lanka, (2020). Annual Report, Colombo: Central Bank of Sri Lanka.

Dunning, J.H. (2000). The eclectic paradigm as an envelope for economic and business theories of MNE activity. International Business Review, pp. 163 -190.

Denisia, V. (2010). Foreign Direct Investment Theories: An Overview of the Main FDI Theories . European Journal of Interdisciplinary Studies, 3(1), pp. 53-59.

Nizam, I. and Hassan, Z. (2018). The impact of good governance of foreign Direct investment inflows: A study on the South Asia region. International Journal of Accounting & Business Management , 6(1) , pp. 66-79.

Ravinthirakumaran, K., Selvanathan, E.A., Selvanathan, S. and Singh, T. (2015). Determinants of foreign direct investment in Sri Lanka. South Asia Economic Journal, 16( 2) , pp. 233-256.

Saidi, Y., Ghadri, H. and Ochi, A. (2013). Governance and FDI Attractiveness: Some Evidence from Developing and Developed Countries. Global Journal of Management and Business Research Finance, 13(6), pp. 15-24.

Udayanga, K.K.T. (2020). Governance indicators and FDI Net Inflows: With Empirical Evidence from Sri Lanka. EPRA International Journal of Multidisciplinary Research - Peer Reviewed Journal, 6(7), pp. 370 - 377.

Vernon, R. (1966). International investment and international trade in product cycle. The quarterly journal of economics, pp. 190-207.

Vijayakumar,S.(2014)The Effects of Exchange rate on the Trade Balance in the Sri Lankan Context after Post Liberalization, International jurner on Global management research, 2 (2),pp 105-116.

Vijesandiran, S. and Vinayagathasan, T. (2020). An empirical analysis of the Impact of economic and noneconomic determinants on foreign direct Investment of Sri

Wanigasuriya, W.M.T.J.(2022).The Impact of Governance on foreign Direct Investment in South Asian Countries. Applied Economic and Business, 6(1) , pp. 45-53.

World Bank.(2022). World Bank Data Base, Washington DC: USA.

Wijeweera, A. and Mounter, W. (2008). A Var Analysis on the Determinants of FDI Inflows: The Case of Sri Lanka. Applied Econometrics and International Development, 8(1),pp. 189-198.

Zeshan, A. and Talat, A. (2014). Impact of governance indicators on FDI Inflows: empirical evidence from Pakistan. Caspian Journal of Applied Sciences Research. 3(9),

The case of MENA. Journal of Research in Business, Economics and Management, 5(3) , pp. 498-608.

https://www.cbsl.gov.lk/en/publication/economic-and-financial-report/annual-report

https://databank.worldbank.org/soure/world-development-indicators https://datacatalog.worldbank.org/dataset/worldwide-governance-indicaors